# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
# Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Economic Stabilization & National Policies , Colombo 01, Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| කාර්යාලය<br>அலுவலகம்<br>Office | දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | +94 11 2484600<br>+94 11 2484700 | |
| ෆැක්ස්<br>பெக்ஸ்<br>Fax | +94 11 2484970<br>+94 11 2320042 | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.treasury.gov.lk |


| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | TO/CFM/01/05/04 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your | |
| දිනය<br>திகதி<br>Date | 2024.12.27 | | |

## திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டல் இலக்கம்- 04/2020

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டசெயலாளர்கள் அனைவருக்கும்.

**2025 ஆம் ஆண்டிற்கான வாக்குப் பதிவுக் கணக்கின் கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டினை அடிப்படையாக கொண்டு ஒவ்வொரு அமைச்சுக்கும், திணைக்களத்திற்கும் கட்டுநிதி எல்லை ஒன்றினை விதிப்பதற்கான தகவல்களை கோருதல்**

01. 2025 ஆம் ஆண்டின் முதல் 04 மாத காலப் பகுதிக்குரிய செலவுகளை தீர்த்துக்கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வாக்குப் பதிவுக் கணக்கிற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

02. 2020.10.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டல் இல. 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு (04) மாதங்கள் தொடர்பில் கட்டு நிதி எல்லையினை விதிக்கும் வகையில் வாக்குப் பதிவுக் கணக்கின் கீழ் தங்களுக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை அடிப்படையாக கொண்டு நி.ஒ.367(அ) இற்கு அமைவான மதிப்பீடொன்றினை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள TOD/IMP/1, TOD/IMP/2, TOD/IMP/3, TOD/IMP/9 மற்றும் TOD/IMP/10(1) போன்ற மாதிரிப் படிவங்களுக்கு அயை தயாரித்து, சம்பந்தப்பட்ட ஏனைய விபரங்களுடன் 2024.12.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலரின் மின்னஞ்சல் முகவரிக்கு (e-mail) அனுப்புதல் வேண்டும்.

03. திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டல் இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் தொடர்ந்தும் மாற்றமுறாது பயன்வலுப்பெறும்.

ஒப்பம் /-

ஏ. என் ஹபுகல
பணிப்பாளர் நாயகம்